# பொது மக்களுக்கான தகவல் மற்றும் NA உறுப்பினர்

NA செய்தியை எடுத்துச் செல்வது நம்முடைய பல உறுப்பினர்களின் நலமடைதலில் ஒரு முக்கிய அங்கமாக இருந்து வருகிறது, மேலும் நம்மில் சிலருக்கு, அவர்களின் திறன்களைக் கண்டறிந்து வளர்க்க உதவியது. நலமடைதலுக்கான NA செய்தி உங்கள் ஆதரவுடன் ஏராளமான மக்களைச் சென்றடையக்கூடும். PI குழுவில் பங்கேற்பது மற்றவர்களின் வாழ்க்கையில் சாதகமான மாற்றத்தை ஏற்படுத்த உங்களுக்கு வாய்ப்பளிக்கிறது.

## பொது மக்களுக்கான தகவல் என்றால் என்ன?

NA வைப் பற்றிய தெளிவான மற்றும் துல்லியமான தகவல்கள் பொதுமக்களுக்கு கிடைப்பதை உறுதி செய்வதே PI குழுவின் பங்காகும். நம்முடைய சங்கம் பற்றிய தகவலுக்கான தேவை முன்னெப்போதையும் விட அதிகமாக உள்ளது. அவதியுறும் அடிக்டுகளை நமது சங்கத்திற்கு கொண்டு வரும் குழுவின் ஒரு பகுதியாக நாம் இருப்பது ஒரு வெகுமதி அதை வார்த்தைகளில் விவரிக்க முடியாது, அனுபவித்து உணர மட்டுமே முடியும்.

## NA உறுப்பினரின் கடமை என்ன?

நம்மை NA உறுப்பினர்களாக நாம் அடையாளப்படுத்திக் கொள்ளும் போது பொதுவில் நமது நடத்தைக்கான பொறுப்பை நாம் ஏற்க வேண்டும். இது பொது மக்களுக்கான தகவல்களின் ஒரு வடிவம். நமது செயல் திட்டத்தை அறியாதவர்கள், நம் ஒவ்வொருவரையும் NA இன் பிரதிநிதியாகப் பார்க்கக்கூடும். நம்முடைய கூட்டங்கள் மற்றும் விழாக்கள் நடத்தப்படும் இடங்களை நாம் பராமரிக்கும் முறையை பொறுத்து பொது மக்கள் NA முழுவதையும் மதிப்பீடு செய்கிறார்கள்.

நார்காட்டிக்ஸ் அனானிமஸ் பற்றிய தகவல்கள் அல்லது விளக்கக்காட்சிகளுக்கான கோரிக்கைகள் வைக்கப்படும் போது பொது மக்களுக்கான தகவல் சேவையின் மற்றொரு வடிவம் நிகழ்கிறது. கோரிக்கை வைக்கப்படும் போது, ஒரு PI கமிட்டி உறுப்பினரைத் தொடர்பு கொள்ள வேண்டும். ஒரு குழு உறுப்பினர் கிடைக்கவில்லை என்றால், அந்த கோரிக்கை குழு சேவைப் பிரதிநிதி (GSR) அல்லது பகுதித் தலைவருக்கு அனுப்பப்பட வேண்டும். ஒவ்வொரு கோரிக்கையும் தக்க கவனத்துடனும் உடனடியாகவும் கவனிக்க வேண்டி இருப்பதால் இவற்றை இந்த முறையில் கையாளுகிறோம். உங்களிடம் ஒரு கோரிக்கை வரும்பொழுது, இது தனிப்பட்டது அல்ல, ஆனால் ஒட்டு மொத்தமாக நார்காடிக்ஸ் அனானிமஸிடம் வந்துள்ள கோரிக்கை என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

## அனாமதேயத்தின் முக்கியத்துவம் என்ன?

இது "நாம்" என்ற திட்டமாகும், மேலும் பொது மக்களுக்கான தகவல்களில் "என்னால் முடியாது, நம்மால் முடியும்" என்ற கருத்து இன்றியமையாதது. நமது ஆன்மீக அடித்தளமான அனாமதேயம் சுயமாக செயல்படும் உறுப்பினர்களால் கடுமையாக சேதமடையக்கூடும்.

நாங்கள் எங்கள் இறுதிப் பெயர்களைக் கொடுப்பதில்லை அல்லது நார்காட்டிக்ஸ் அனானிமஸின் உறுப்பினர்களாக ஊடகங்களில் தோன்றுவதில்லை. நலமடையச் செய்யும் எங்கள் ஆன்மீக செயல்திட்டத்தின் ஒரு பகுதியாக மிகவும் பணிவான சேவை பாணிக்கு ஆதரவாக நாங்கள் சுய விளம்பரத்தை தவிர்க்கிறோம். எங்கள் அனுபவத்தில், NA வின் உறவினால் "ஊடக நட்சத்திரங்களாக" மாறும் உறுப்பினர்கள் அவர்கள் நலமடைவதற்கான ஆன்மீக அடித்தளத்தை ஆபத்துக்குள்ளாக்குவதோடு, பொதுமக்களுக்கு NA வின் நலமடைதலை பற்றிய தவறான கண்ணோட்டத்தை வழங்குவதற்கான அபாயத்தையும் ஏற்படுத்துகிறார்கள்.

## உறுப்பினர்கள் எவ்வாறு ஈடுபடுகிறார்கள்?

ஒவ்வொரு உறுப்பினருக்கும் பொது மக்களுக்கான தகவல் குழுவில் இடம் உண்டு. உங்கள் உள்ளீடு, பரிந்துரைகள், கருத்து மற்றும் பங்கேற்பு இவைகளை PI மதிக்கிறது. PI குழுவின் கூட்டத்திற்கு வர உங்களை வெளிப்படையாக அழைக்கிறோம். பெரும்பாலான சேவைக் குழுக்களைப் போலவே, PI க்கும் வேலை செய்யத் தயாராக இருக்கும் கைகளும் மனங்களும் தேவை.

## வேலை எவ்வாறு செய்யப்படுகிறது?

குழுக்கள் பெரும்பாலும் ஒன்று கூடி ஒரு பகுதி சேவைக் குழுவை (ASC) அமைக்கின்றன. பொது மக்களுக்கான தகவல் சேவைகள் ASC இன் துணைக்குழுவிற்கு வழங்கப்படுகின்றன. தனிநபர்கள், முகவர்கள் மற்றும் ஊடகங்கள் போன்ற பல்வேறு மூலங்களிலிருந்து தகவலுக்கான கோரிக்கைகளை PI குழு பெறுகிறது.

நாங்கள் பொதுமக்களுக்கு தகவல்களை வழங்கும் வழிகளில் சில:

1. தேவாலயங்கள், குடிமை அமைப்புகள், பள்ளிகள் அல்லது ஊடகங்களில் உரையாற்ற அழைக்கப்படும் பேச்சாளர்களுக்கான கோரிக்கைகளுக்கு பதிலளித்தல்.
2. எங்களை எப்படித் தொடர்பு கொள்வது என்பதை பொதுமக்களுக்கு தெரிவிப்பதற்கான சுவரொட்டிகள், அழைப்பிதழ்கள் உருவாக்குதல் மற்றும் விநியோகித்தல் மற்றும் பிற பொதுச் சேவை அறிவிப்புகளைச் செய்தல்.
3. கற்றல் நாட்கள் மற்றும் பட்டறைகள்.
4. கூட்டத்தின் தகவலுக்கான முகவரி, தகவல் கடிதங்கள் மற்றும் அடிக்டுகளுடன் தொடர்புடையவர்களுக்கான துண்டுப்பிரசுரங்களை அஞ்சலில் அனுப்புதல்.
5. சமகாலத்தில் நிகழும் திட்டங்களில் மருத்துவமனைகள் மற்றும் சிகிச்சை நிலையங்களுக்கான குழுக்களுடன் ஒத்துழைத்தல்.
6. தொலைபேசி அல்லது அலுவலகக் குழுக்கள் இல்லாத இடங்களில், ஒரு தொலைபேசியை இயக்கும் பொறுப்பு PI குழுவுக்கு இருக்கலாம்.

இந்த செயல்களில் எதிலாவது நீங்கள் ஈடுபட விரும்பினால், GSR அல்லது உங்கள்

உள்ளூர் PI குழுவை அணுகவும். நம்மிடம் இருப்பதைக் கொடுக்காவிட்டால் அதை வைத்திருக்க முடியாது. பொது மக்களுக்கான தகவல் குழு சேவை அதை செய்ய நம்மை அனுமதிக்கிறது.

Copyright © 2020 by
Narcotics Anonymous World Services, Inc.
அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை

World Service Office
PO Box 9999
Van Nuys, CA 91409 USA
T 818.773.9999
F 818.700.0700
Website: www.na.org

World Service Office–CANADA
Mississauga, Ontario

World Service Office–EUROPE
Brussels, Belgium
T +32/2/646 6012

World Service Office–IRAN
Tehran, Iran
www.na-iran.org

இது NA ஃபெலோஷிப் அங்கீகாரம்
பெற்ற உரையின் மொழிபெயர்ப்பு.

Narcotics Anonymous, , , , The NA Way
ஆகியவை Narcotics Anonymous World Services,
Incorporated இன் பதிவுபெற்ற வர்த்தகசின்னங்கள்

ISBN 9781633803336 Tamil 12/20

WSO Catalog Item No. TA3115

Narcotics Anonymous®
நார்காடிக்ஸ் அனானிமஸ்

IP No. 15-TA

# PI மற்றும் NA உறுப்பினர்